பாரதியாரின் அறவியல் நோக்கு

கா.அரங்கசாமி
கோபி கலைக்கல்லூரி, கோபிசெட்டிபாளையம்

முன்னுரை

பழகு தமிழில் பாட்டிசைத்து இலகுபுகழ் கொண்ட புதுமைப் பாவலன் பாரதி. அவன் "புதிய அறம்பாட வந்த அறிஞன்" எனப் போற்றுவார், பாவேந்தர். அப் பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதியின் அறவியல் நோக்கினை, 1. இறையுணர்வும் சமயமும் 2. காந்தியம் 3.பொதுவுடைமை 4. பகுத்தறிவியக்கம் 5.வள்ளுவம் என்னும் ஐவகைப்பட்ட அறவியல் நெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு ஆய்வதே இக்கட்டுரையின் கருத்தாம். "அவருடைய (பாரதியின்) வளரும் மனம் படிப்படியாகப் பரிணாமம் அடைந்து கொண்டிருந்ததையும், சிந்தனை விரிவடைந்த போக்கினையும் அவருடைய நூல்களிலிருந்து எளிதில் கண்டு கொள்ளலாம்"[1] என்ற கருத்து அவருடைய பாடல்கள்வழிக் காணும் அறவியல் நோக்கினுக்கும் பொருந்தும் என்பதனை இக்கட்டுரை காண முற்பட்டுள்ளது.

**பாரதியின்அறவுணர்வு:**

வறுமையிலும் அறம் போற்றுக[2] அறம் மிக்க சிந்தையுடன் வாழ்க[3] அறம் வளர்க மறம் மடிக[4] நீதி தவறேல்[5] தருமமே வெல்லும்[6] அறமே பெரிதென அறிந்திடுக[7] பாரில் அறமழை பெய்குவான்[8] வையம் பயனுறப் பாட்டினில்அறம் காட்டெனுமோர் தெய்வம்[9] என்பன போன்ற கருத்துக்கள் பாரதி கொண்டுள்ள அறவுணர்வின் ஆழத்தைக் காட்டும். "அறத்தான் வருவதே இன்பம்"[10] என்னும் வள்ளுவத்தை அடியொற்றி "அறமொன்றே தரும் மெய்யின்பம் என்ற நல்லறிஞர் தம்மை அனுதினம் போற்றுவேன்"[11] என்று பாடுவதால் தமது படைப்புக்களின் ஆணிவேர் "அறம்" (வள்ளுவம்) என்பதைச் சுட்டுகின்றார்.

**இறையுணர்வும் சமயமும்:**

பிரித்தானியா கலைக்களஞ்சியம் சமயத்திற்கும் ஒழுக்கவியலுக்கும் இடையில் உள்ள உறவினைப் பின்வருமாறு கூறுகிறது. வளர்ந்த நிலையில் சமுதாயமும் ஒழுக்கவியலும் பின்னிப் பிணைந்துள்ளன. மெய்ம்மையான சமய வாழ்வும், ஒழுக்க வாழ்வும் ஒன்றேயாம். ஆனால் வரலாற்று நோக்கில் இரண்டும் என்றும் தழுவிச் செல்வன அல்ல. அன்றியும் இரண்டும் அடிக்கடி முரண்படவும் செய்கின்றன[12], இக்கருத்தினுக்கொப்ப, காலத்தின்

www.tamilarangam.in

தாக்கத்திற்குட்பட்ட பாரதியிடத்தும் சமயத்தில் நின்று பின் சமயம் கடந்து விளங்கும் வளர்ச்சியைக் காணலாம். "பயனுண்டு பக்தியினாலே"[13] என்று பாடியவர், பக்தியினால் 'சித்தம் தெளியும்' சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கும்; ஆசையைக் கொல்வோம்; புலை அச்சத்தைக் கொன்று பொசுக்கிடுவோம்; கல்வி வளரும், அல்லல் ஒழியும், மெய் வல்லமை தோன்றும். பிணி தீரும், சோர்வுகள் போகும், பல செல்வங்கள் வந்து மகிழ்ச்சி உண்டாகும்"[14-15] என்று கூறுகின்றார். அவர்தம் பக்தியுள்ளம் அனைத்துயிரிலும் இறையைக் காணுகிறது. மற்றும்,

"பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம் - பரி
பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம்"[16]

என்று முழக்கமிடுகிறார். அத்துடன் 'எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்[17] என நெறிப்படுத்துகின்றார். மேற்காட்டியவற்றால், அவர்தம் இறையுணர்வும் சமயச் சிந்தனையும் சமுதாய அறத்தின் அடிப்படையிலேயே தோற்றம் பெறுகின்றன என்பதனைக் காணலாம்.

**காந்தியம்:**

இருபதாம் நூற்றாண்டில் அமைதி வழியில் புரட்சி செய்தவர் காந்தியடிகள். அறம் பற்றி அவர் கூறும் கருத்துக்களின் அடிப்படைச் சிந்தனைகளாவன: அறத்திற்குச் சமயம் அடிப்படையாவது, தெய்வீகமாவது, புலனின்பம் நாடாதது, வாழ்வியலுக்கு உயிரோட்டமாவது, தன்னலமற்றது, செல்வ நாட்டமின்றித் தியாகம் செய்வது, பிறர்க்கென வாழ்வது என்பனவாம் 18 காந்தியத்தின் தாக்கம் பாரதியிடத்துப் பதிந்துள்ள பாங்கினை, 'தொடக்க நிலையில் வன்முறையில் நம்பிக்கையுள்ள புரட்சிவாதி அவர் (பாரதி), பிற்காலத்தில் அகிம்சையைப் பெரிதும் வரவேற்றுப் பாடுகின்றார். இந்த வன்முறை நீக்கம் என்ற ஆயுதம் ஒன்றே உலகிற்கு அமைதியையும் ஒழுங்கையும் தரவல்லது என்று உலகவர்க்குக் கூறுகிறார்[19] என்று எடுத்துக் காட்டுகின்றார். காந்தியடிகள் அரசியலில் இறைமை, பக்தி, மெய்ஞ்ஞானம், இன்னா செய்யாமை இவற்றைப் பிணைத்துப் பெறற்கரிய வெற்றி பெற்றார் என்று பாரதி பாராட்டிசைக்கின்றார்[20] மேலும் காந்திய வழி நின்று 'கடமையாவன தன்னைக் கட்டுதல், பிறர் துயர்தீர்த்தல், பிறர் நலம் வேண்டும்[21] என்றும், 'நீதி நெறியினின்று பிறர்க்குதவும் நேர்மையர் மேலவர், கீழவர் மற்றோர் [22], என்றும் வரையறை செய்கின்றார்.

www.tamilarangam.in

**பொதுவுடைமை:**

பொதுவுடைமை அறவியலின் தோற்றம், பரந்துபட்ட அடிப்படையைக் கொண்டதாகும். உற்பத்தி மூலங்களின் உரிமை, பொருளியல் அடிப்படை, சமவுடைமை அமைப்பு என்பனவே அவை. அக்கோட்பாட்டின் வழி மக்கள் ஒருவரை ஒருவர் மதித்து நடப்பர். உள்ளங் கலந்த நட்புறவுடன் கூடித் தொழில் செய்வர். கூட்டுறவுடன் வாழ்வர். பொதுவுடைமை அறவியலின் அடிப்படையே கூடி வாழ்தலும் தோழமையுணர்வுடன் உதவுதலுமாம். இதனையே 'ஒவ்வொருவரும் அனைவருக்காக - அனைவரும் ஒவ்வொருவருக்காக" என்று முழங்குவர்[23] இந்நோக்கின் தாக்கத்தால் பாரதி "ஆகா வென்றெழுந்தது பார் யுகப் புரட்சி[24] என்றும் 'முப்பதுகோடி சனங்களின் சங்கம், முழுமைக்கும் பொதுவுடைமை[25] என்றும் முழங்கித் தமிழனுக்குப் 'பொதுவுடைமை" "புரட்சி" எனுமிரு சொற்களைப் படைத்துப் புத்துலக எண்ணங்கட்கு வித்திடுகின்றார். அரசியல் வானில் புத்துணர்வு தோன்றிய பொழுது புதிய அறநிலைக் கருத்துக்கள் தேவைப்படுகின்றன[26] என்ற கருத்துக்கிசைய, "எல்லாரும் இந்நாட்டு மன்னராக"[27] தனியொருவனுக்கு உணவிலாத நிலையழிய"[28], 'ஒற்றுமையால் மேன்மையுண்டாக்கி[29] ஏழையென்றும் அடிமையென்றும் எவனும் இல்லை"[30] என உலகு காண, 'பாருக்குள்ளே சமத்தன்மை - தொடர் பற்றுஞ் சகோதரத் தன்மை"[31] மலர, ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ"[32] வழிகாண வேண்டும் என்று பொதுமையறநெறி நின்று பாடுகின்றார்.

**பகுத்தறிவியக்கம்**

பகுத்தறிவியக்க நோக்கில் 'அறம்' என்பது நம்பிக்கை அல்லது மத அடிப்படையில் அமையாமல் தானே தனது பகுத்தறிவால் உணர்ந்து – அறிந்து உண்மையாகக் கடைப் பிடிக்கும் ஒழுக்கமே ஒழுக்கமாம். உண்மை, நேர்மை, கூடிவாழ்தல், அனைவரையும் ஒப்ப மதித்தல், சாதிசமய வேறுபாடின்மை, மாந்தவின நலம் பேணல், தந்நலமின்மை, பகுத்தறிவிற்கு மாறுபட்டதை ஏற்காமை என்பனவேயாம்[33] இந்த நோக்கின் ஆழத்தைப் பாரதியின் பாடல் வழி நாம் காணலாம். 'சாதி மதங்களைப் பாரோம்"[34] "பிச்சை ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே[35] "கஞ்சி குடிப்பதற்கில்லார் அதன் காரணங்கள் இவை யென்னும் அறிவுமில்லார்"[36] "பொய்ச் சாத்திரப் பேய்கள்"[37] "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை"[38] என்பன போன்ற அறிவார்ந்த தொடர்கள் அவர்தம் பகுத்தறிவு மாண்பினைக் காட்டும். மற்றும் "எட்டுமறிவினில்

www.tamilarangam.net

ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை”[39] எனவுணர்ந்து “அறிவொன்றே தெய்வம்”[40] எனப் போற்றுகவென்று ஆணையிடுகின்றார்.

**வள்ளுவம்**

பாரதி பாடல்களின் அடித்தளம் வள்ளுவம் என்பதை முன்னர்க் கண்டோம்[41]. “வள்ளுவருடைய கருத்துக்களைப் பாரதியார் தம் பாடல்களில் பல இடங்களில் எடுத்தாண்டுள்ளார்”[42] என்னும் உரைக்கொப்ப, அன்பு[43], அருள் [44], ஈகை[45], பொறை [46], உண்மை[47] , மெய் [48], பொய்மைக்கேடு[49], கோபம் [50] , சொல்லினிமை[51], புறஞ்சொல்லாமை[52] என்பனவற்றைப் பெரிதும் போற்றுகின்றார். ஈகையில் புதுநெறி காட்டுகின்றார். ‘அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டுதல், அவையாவினும் கோடி புண்ணியம் ஓர் ஏழைக்கெழுத்தறிவித்தல்[53] என்றவர் உரைக்கும் போதும், பொய், கயமை, சினம், சோம்பர், கவலை, மயல், வீண் விருப்பம், புழுக்கம், அச்சம், ஐயம் இவற்றையெல்லாம் அறிவுவாளால் அறுத்துத் தள்ளுக[54] என்றவர் பாடும் போதும் வள்ளுவத்தைத் தம் புதுமை நோக்கில் இழைத்து நல்லறம் கூறும் திறம் புலப்படும்.

**முடிவுரை**

“புதுமையின் வேர் பழமையில் உள்ளது”[55] என்னும் மொழிக்கொப்பப் பக்தியிலும், சமுதாய அறத்தைக் கண்ட பாரதியார், பொதுவுடைமை உணர்வில் புரட்சிப் பாவலராய் விளங்கிப் பின்னர், காந்தியத்தில் நிலைத்து நிற்கின்றார். பகுத்தறிவு நிலையில் அறிவே தெய்வம் எனக் கண்டுணர்ந்து, வள்ளுவர் வழியில் அறநெறியுணர்த்தி, கடமையின் பயன் - வாழ்வின் பயன் ‘ “அறம் பொருள் இன்பம் வீடெனப்”[56] பாடுகின்றார். இவ்வாறு பழமையில் பதிந்த வேரில் கிளைத்துத் தழைத்துப் புதுமை அறிவியல் மணக்கும் மலராகப் பாரதி பாடல்கள் விளங்குவதைக் காணலாம்.

www.tamilarangam.in

**குறிப்புக்கள்**:

1. டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் எம்.ஏ., எம்.லிட்.,பிஎச்.டி., “பாரதி பாநிலை“ ப.7 தமிழாக்கம் திரு.மு.மாணிக்கம்.எம்.ஏ.இ
2. பாரதியார் கவிதைகள் ப.25 (திருமகள் கம்பெனி, சென்னை-1, ஆகஸ்டு 62)
3. பாரதியார் கவிதைகள் ப.75, 59, 259, 549, 75, 132
10. குறல் எண்.39
11. பாரதியார் கவிதைகள் ப.332
12. சென்னைப் பல்கலைக் கழக எம்.பில் பட்ட ஆய்வேடு “ குமர குருபரர் சிவப்பிரகாசர் நீதி நூற்கள் “ ப.8 (இயல் 2) மேற்கோள் , “பிரித்தானியா கலைக் களஞ்சியம்” ப.760
13. பாரதியார் கவிதைகள் ப.209
14. பாரதியார் பா நிலை ப.77
15. பாரதியார் கவிதைகள் ப.46
16. பாரதியார் கவிதைகள் ப.68
17. பாரதியார் கவிதைகள் ப.46
18. “குமரகுருபரர் சிவப்பிரகாசர் நீதி நூற்கள்” ப.16 (இயல் 2) “மேற்கோள்” **The selected works of Mahatma Gandhi Vol.IV, (The Basic Works) Pages 5,6,13,22,26,30,35.**
19. பாரதியார் பாநிலை – ப.148
20. பாரதியார் கவிதைகள் பக். 86, 87, 115, 24
23. “குமரகுருபரர் சிவப்பிரகாசர் நீதி நூற்கள்” ப.22 (இயல் 2) “மேற்கோள்” **Marxist Philosophy, P. 338**

24 - 32 பாரதியார் கவிதைகள் பக்.109, 45, 59, 46, 45, 283, 66, 267, 67

33. “குமரகுருபரர் சிவப்பிரகாசர் நீதி நூற்கள்” பக்.24, 25 (இயல் 2) “மேற்கோள்” பிரித்தானியா கலைக்களஞ்சியம் பக்.1178 (தொகுதி 18)

34 - 40. பாரதியார் கவிதைகள் பக்.17, 67, 41, 67, 273, 236.

41. இக்கட்டுரை ப.1
42. பாரதி பாநிலை ப.45

43 - 56. பாரதியார் கவிதைகள் பக். 98, 117, 146, 127, 252, 256, 338, 53, 247, 57, 338, 232, 261, 202, 316, 218, 115

www.tamilarangam.in